**ஒருங்கிணைந்த நீர்நிலை மற்றும் நீர்வள முகாமைத்துவ செயற்திட்டம் (IWWRMP) - 2023**

---

ஒருங்கிணைந்த நீர்நிலை மற்றும் நீர்வள முகாமைத்துவ செயற்திட்டத்தின் (IWWRMP) 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைசாத்திடப்பட்ட 2021 ஏப்ரல் 22 ஆம் திகதிய 6621-எல்கே மற்றும் 6619-எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நீர்ப்பாசன அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் நீர்ப்பாசன திணைக்களம், இலங்கை மகாவலி அதிகாரசபை, வட மாகாண சபை நீர்ப்பாசன திணைக்களம், கிழக்கு மாகாண சபை நீர்ப்பாசன திணைக்களம் மற்றும் நீர் வளங்கள் சபை என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன.

மேல் மகாவலி நீர்நிலையை மீட்டெடுத்தல், நீர்வள முகாமைத்துவத்திற்கான நிறுவன திறனை வலுப்படுத்துதல் மற்றும் நீர் வள உட்கட்டமைப்பின் செயற்பாட்டை மேம்படுத்துதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். அணைகளின் மேம்பட்ட பாதுகாப்பு மற்றும் நீர்ப்பாசனத்திற்கான மேம்பட்ட நீர் விநியோக வலையமைப்புக்களை செயற்பாட்டு ரீதியாக குறிக்கிறது. செயற்திட்டத்தின் செயற்பாடுகள் நீர்நிலை மற்றும் நீர்வள முகாமைத்துவம், அணை பாதுகாப்பு தொடர்பான உட்கட்டமைப்பு மேம்பாடுகள், தற்செயல் அவசர பதிலளிப்பு மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் ஆகிய நான்கு கூறுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகிறது.

கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 14,199.43 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 75.03 மில்லியனானதுடன் அதில் ரூபா 13,158.55 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 69.53 மில்லியன் ஆசிய அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 1,040.88 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2021 மே 13 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2025 ஒக்தோபர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்றினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிகளின் பயன்பாடு தொடர்பான கூற்று விடுபட்டுள்ளதா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிகளின் பயன்பாடு தொடர்பான கூற்றிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிகளின் பயன்பாடு தொடர்பான கூற்றின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிகளின் பயன்பாடு தொடர்பான கூற்று பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| செயற்பாடு | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் அலகுகள்/ சதவீதம் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் அலகுகள்/ சதவீதம் | | |
| பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் 2021 முதல் 2025 வரை வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 22.13 மில்லியன் பொதிகள் | 2023 ஆம் ஆண்டிற்காக 41 பொதிகள் வழங்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது. | 24 பொதிகள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன | 41 பொதிகளில் 17 பொதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நீர்த்தேக்க அணைகள், கால்வாய்கள் புனரமைப்பு, மேம்பாடுகள், உபகரணங்கள் மற்றும் தூக்கும் இயந்திரங்களை வழங்கி நிறுவுவதில் தாமதம் |

**முகாமைத்துவத்தின் பதில்** இணங்கப்பட்டது.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் செயற்திட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

### 2.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அம்பாறை சேனாநாயக்க சமுத்திர குளத்திற்கு கற்கட்டு கரை (Rip-Rap) பாதுகாப்பை வழங்குவதற்கும் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான குள வீதியை மேம்படுத்துவதற்கும் 2022 திசெம்பர் 28 இல் ரூபா 532.85 மில்லியன் (வரி தவிர்த்து) பெறுமதியான ஒப்பந்தம் வழங்கப்பட்டது. கற்கட்டு கரை தயாரிப்பில் தரம் குறைந்த கிரனைட் பயன்படுத்தப்பட்டு அதன் மேற்பரப்பில் உயர்தர கிரானைட் | 2023 யூலை 7 இல் அம்பாறை பிராந்திய நீர்ப்பாசனப் பொறியியலாளர் இந்த இடத்தை பரீட்சித்த போது அணையின் தரம் குறித்த கவலையின் காரணமாக அணையில் குவிக்கப்பட்ட 5 ஆம் இலக்க வடிகட்டி அடுக்குப் பொருட்களை தர பரீட்சிப்பு அறிக்கைகள் வழங்கப்படும் வரை போட வேண்டாம் என்று ஒப்பந்ததாரருக்கு அறிவுறுத்தப்பட்டது. | PMU ஆல் மேற்கொள்ளப்படும் பெறுகை பணிகளின் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை தொடர்பாக முழுமையான மற்றும் வினைத்திறனான பெறுகை முகாமைத்துவ முறைமை அமுல்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்டதென ஊடகங்களில் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் செயற்திட்டம் விசாரணையை நடாத்தி, 282 கியூப் கிரனைட் கற்கள், கற்கட்டு கரை தயாரிப்பதற்காக, பணியிடத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, தரமற்றவை என, கண்டறிந்து, அவற்றை பணியிடத்தில் இருந்து அகற்ற, ஒப்பந்ததாரரிடம் கூறப்பட்டது. மேலும் கற்கட்டு கரைக்கு பயன்படுத்தப்பட்ட தரமற்ற கற்களை அகற்றி மீண்டும் சீரமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஒப்பந்ததாரர் கற்கட்டு கரையில் சில இடங்களில் தரமற்ற கிரானைட் கற்களை பயன்படுத்தியதையும் நீர்பாசன அதிகாரிகள் அடையாளம் கண்டுள்ளனர். | | |
| (ஆ) | நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான அரவத்த குளக் கரையை மேம்படுத்துவதற்காக ரூபா 40.02 மில்லியன் தொகைக்கு வரியல்லாத ஒப்பந்தம் வழங்கப்பட்டதுடன் ஒப்பந்தம் 2022 திசெம்பர் 31 இல் பூர்த்தி செய்யப்பட இருந்தது. எனினும், இந்த ஒப்பந்தம் 03 தடவைகள் 2024 ஏப்ரல் 30 வரை நீடிக்கப்பட்டதுடன், மீளாய்வாண்டின் இறுதியில் நிர்மாண முன்னேற்றம் 84 சதவீதமாக இருந்தது. ஒப்பந்த கால நீடிப்பு காரணமாக விலை வேறுபாடுகளுக்காக ரூபா 19.71 மில்லியன் அதிகமாக செலுத்தப்பட வேண்டியிருந்தது. | விலை நிகழத்தக்கவைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி போதுமானதாக காணப்படவில்லை, எனவே மேலதிகமாக ரூபா 21.58 மில்லியன் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்டது. இதன் விளைவாக, திருத்தப்பட்ட மதிப்பீடு தற்போது ரூபா 61.60 மில்லியனாக இருந்ததுடன் அதன் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | PMU ஆல் மேற்கொள்ளப்படும் பெறுகை பணிகளின் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை தொடர்பாக முழுமையான மற்றும் வினைத்திறனான பெறுகை முகாமைத்துவ முறைமை அமுல்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | மகாவலி அதிகாரசபைக்கு சொந்தமான பொல்கொல்ல மற்றும் உடவலவ நீர்த்தேக்கங்களுக்கு இரண்டு நிரந்தர பாரம் தூக்கும் இயந்திரங்களை நிறுவுவதற்காக ரூபா 805 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நோக்கத்திற்காக கேள்வி கோரப்பட்டு ஏழு மாதங்களுக்குப் பின்னர் 2022 ஏப்ரல் 8 இல் ரூபா 797.61 மில்லியன் கூட்டுமொத்தமான இரண்டு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டது. எனினும், ரூபாயின் மதிப்பு சரிந்ததால், இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களுக்கு அதிக செலவு ஏற்பட்டதால் ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்தை முன்னர் வழங்கப்பட்ட விலையில் | நாட்டின் அந்நியச் செலாவணி பற்றாக்குறையால், நிர்மாணப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு ஐ.அ.டொலர்களில் கொடுப்பனவை ஒப்பந்ததாரர் கோரினார். IWWRMP செயற்திட்டத்தின் மூலம் உலக வங்கியின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு இதற்கான ஒரு முறை நிறுவப்பட்டது.<br><br>கடுமையான ரூபாய் மதிப்பிழப்பு காரணமாக, நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) குறிகாட்டிகளின் அடிப்படையில் விலை நிகழத்தக்கவைகள் | செயற்திட்டத்தை முன்மொழிவதற்கு முன்னர் முன்மொழிவின் முன்னுரிமையை மிகவும் கருத்தில் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்படுத்த விரும்பவில்லை. பின்னர் ஒப்பந்ததாரர் ரூபா 1,248.37 மில்லியனிற்கு செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு இணங்கினார். இதனையடுத்து, முந்தைய விலையை விட அதிகமாக ரூபா 450.76 மில்லியனை செலுத்துவதற்கு இணங்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டின் இறுதியளவில் உடவலவ நீர்த்தேக்கத்திற்கான பாரம் தூக்கும் இயந்திரத்தின் நிர்மாண முன்னேற்றம் 33 சதவீதமாகவும் பொல்கொல்ல நீர்த்தேக்கத்தின் நிர்மாண முன்னேற்றம் 37 சதவீதமாகவும் இருந்தது. | கணிப்பிடப்பட்டன. ஒப்பந்தங்கள் டொலர் கூறுக்கு 10% நிகழத்தக்கவையை ஒதுக்கி இந்த விலை நிகழத்தக்கவைகளை கணக்கிற்கு சீராக்கம் செய்தன. | |
| (ஈ) | 2022 ஆம் ஆண்டில் கொத்மலை மற்றும் ரன்தெனிகல நீர்த்தேக்க அணைகளின் இயக்கங்களைக் கண்காணிப்பதற்காக தானியங்கி புவிசார் அளவீட்டு முறைமையை நிறுவுவதற்காக ஐ.அ.டொலர் 1,749,791.18 (ரூபா 629.92 மில்லியன்) தொகைக்கு வெளிநாட்டு கம்பனியொன்றுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. ஒப்பந்தம் விலை கோரப்பட்டு 11 மாதங்களிற்குப் பின்னர் ஒப்பந்தம் வழங்கப்பட்டதுடன் ஒப்பந்ததாரர் அசல் விலையில் ஒப்பந்தத்தை ஏற்காததால் 2023 பெப்ரவரி 24 இல் மகாவலி அதிகாரசபையால் ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டது. இந்த ஆண்டும் இந்த ஒப்பந்தம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கொத்மலை மற்றும் ரன்தெனிகல நீர்த்தேக்க அணைகளை கண்காணிப்பதற்காக தானியங்கி புவிசார் அளவீட்டு முறையை நிறுவுவதற்கு விலைமனுக்கள் கோரப்பட்டன. ஒப்பந்தம் 2022 ஆகஸ்ட் 8 இல் ஐ.அ.டொலர் 1,749,791.18 பெறுமதிக்கு வழங்கப்பட்டது. எனினும், இலங்கையின் பொருளாதார சவால்கள் காரணமாக, ஒப்பந்ததாரர் இணங்கப்பட்ட விலையில் தொடர விரும்பவில்லை. இதன் விளைவாக, ஒப்பந்தம் 2023 பெப்ரவரி 24 இல் இரத்து செய்யப்பட்டது. | உலக வங்கியின் வழிகாட்டலின் பிரகாரம் விரைவில் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு புதிய ஒப்பந்ததாரரைத் தெரிவுசெய்தல். |
| (உ) | மேலும், கிழக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் ரூபா 620.29 மில்லியன் மதிப்பிடப்பட்ட பெறுமதியுடனான எட்டு ஒப்பந்தங்கள் மீளாய்வாண்டில் தொடங்கப்படவில்லை. இந்த ஒப்பந்தங்களை ஒதுக்கும் பணி, செயற்திட்டத்தின் பெறுகை மற்றும் ஒப்பந்த பிரிவால் கையாளப்படுகிறது. தற்போது, திணைக்களத் தலைவர் மற்றும் ஒரு பெண் பொறியியலாளர் மாத்திரமே பணிபுரிந்து வரும் நிலையில், நான்கு அங்கீகரிக்கப்பட்ட பொறியியலாளர்கள் மற்றும் ஒரு முகாமைத்துவ உதவியாளர் இல்லாததால் திணைக்களத்தின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் இடையூறாக உள்ளது. | கிழக்கு மாகாணத்தில் எட்டு செயற்திட்டங்களல்ல ஏழு செயற்திட்டங்களுக்கு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம், இந்த ஏழு செயற்திட்டங்களில், ஐந்து செயற்திட்டங்கள் ரூபா 383.95 மில்லியன் ஒதுக்கப்பட்ட பாதீட்டுடன் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன. | PMU ஆல் மேற்கொள்ளப்படும் பெறுகை பணிகளின் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை தொடர்பாக முழுமையான மற்றும் வினைத்திறனான பெறுகை முகாமைத்துவ முறைமை அமுல்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் இச்செயற்திட்டத்திற்காக முதலில் ஒதுக்கப்பட்ட ஐ.அ.டொலர் 10 மில்லியன் (ரூபா 3,000 மில்லியன்), மகாவலி, வடக்கு மற்றும் கிழக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களங்களின் கீழ் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நீர்ப்பாசன புனரமைப்புப் பணிகளுக்காக செலவிடப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், ரூபா 2,235 மில்லியன் பெறுமதியான 659 நீர்ப்பாசன புனரமைப்பு செயற்திட்டங்களை உலக வங்கி அங்கீகரித்த போதிலும் 493 செயற்திட்டங்களின் செயற்பாடுகள் மாத்திரமே தொடங்கப்பட்டிருந்தன. | உலக வங்கி ஐ.அ.டொலர் 10 மில்லியனைப் பயன்படுத்தி, சமூக அடிப்படையிலான நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய 861 செயற்திட்டங்களுக்காக ரூபா 29.50 மில்லியனை அங்கீகரித்திருந்தது. மேலும், பின்வரும் முறைகளின் பிரகாரம் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன: படை கணக்கு முறைமையின் கீழ் 12 செயற்திட்டங்களுக்கும், கடை முறையின் கீழ் 10 செயற்திட்டங்களுக்கும், தேசிய போட்டி கேள்வி முறையின் கீழ் 9 செயற்திட்டங்களுக்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.<br><br>வழங்கப்பட்ட செயற்திட்டங்களில், 685 செயற்திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன, ரூபா 1,200 மில்லியன் கூட்டுமொத்தமான கொடுப்பனவுகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் நாளதுவரை 300 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. | PMU ஆல் மேற்கொள்ளப்படும் பெறுகை பணிகளின் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை தொடர்பாக முழுமையான மற்றும் வினைத்திறனான பெறுகை முகாமைத்துவ முறைமை அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |
| (எ) | ரூபா 221.99 மில்லியன் பெறுமதியான ஒரு ஒப்பந்தம் கொத்மலை, விக்டோரியா, ரந்தெனிகல மற்றும் ரண்டம்பே நீர்த்தேக்கங்கள் உட்பட 3,100 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட மேல் மகாவலி நீர்ப்பிடிப்புப் பகுதிகளுக்கான நீர் வள முகாமைத்துவத் திட்டத்தை தயாரிப்பதற்காக சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனத்திற்கு மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டது. மகாவலி அதிகாரசபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் இந்த செயற்திட்டத்துக்கான அறிக்கைகளைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தன. எனினும், அந்த நிறுவனங்களின் பதவியணியினரால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய இந்த பணிகள், கணிசமான செலவில் வெளித் தரப்பினருக்கு வெளியில் வழங்கப்பட்டன. | அமைச்சின் செயலாளர் மேலதிக செயலாளரிற்கு (ஸ்ரீ லங்கா மகாவலி அதிகாரசபை மற்றும் நீர்ப்பாசன திணைக்களம்) அனுப்பியுள்ள குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, மேல் மகாவலி நீர்நிலைப் பிரதேசங்களுக்கான நீர்வள முகாமைத்துவத் திட்டம் இதற்கு முன்னர் இந்த நிறுவனங்களால் தயாரிக்கப்பட்டிருந்ததா என ஆராயப்பட்டது. மேற்குறிப்பிட்ட நிறுவனங்கள் இதற்கு முன்னர் இவ்வாறான நீர்வள முகாமைத்துவத் திட்டங்களை உருவாக்கியிருக்கவில்லை எனவும், இது தொடர்பில் அவர்களுக்கு முன் அனுபவம் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | தெளிவான கிரய-நலன் பகுப்பாய்வு உட்பட, வெளியே வழங்குதல் முடிவுகளுக்கான வழிகாட்டல்களை நிறுவுதல். குறிப்பிடத்தக்க பெறுமதியைக் கொண்டுவரும் போது அல்லது ஒரு நியாயமான கால எல்லையில் உள்நாட்டில் உருவாக்க முடியாத விசேட நிபுணத்துவம் தேவைப்படும் போது மாத்திரமே வெளியே வழங்குதல் நிகழ வேண்டும். |